பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 09 செவ்வாய்க்கிழமை 22.04.2025 கதிர் 164

## இனி இது ரகசியம் அல்ல!

ஆளும் தரப்பின் விருப்பப்படிமே 6 தேர்தல் நிச்சயம் நடக்கும் என்பதே இப்போ-தைய அறுதியான முடிவு. அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், பிரதிநிதிகளுடன் நேற்று தேர்தல் ☞ 2

## சிறுசிறு விடயங்களுக்கும் வழக்கு வைத்து அனைவர் நேரத்தையும் வீணடிக்கக்கூடாது

### சுமந்திரன் நீதிமன்றில் சுட்டிக்காட்டு

வீதியைப் போராட்டக்காரர்கள் மறித்தார்கள் என்பது ஒரு சிறுவிடயம். சிறிய விடயத்திற்கும் வழக்குத் தாக்கல் செய்து அனைவரது நேரத்தினையும் வீணடிக்கக்கூடாது என்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார் சட்டத்தரணி சுமந்திரன்.



2023 ஒக்டோபர் 8 மட்டக்களப்பு - செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின் போது கொம்மாதுறை பகுதியில் - மயிலத்தமடு மாதவனை மேச்சல்தரை பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் - முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 சந்தேகநபர்களுக்கு எதிரான ☞ 2

## நீதிமன்ற உத்தரவை மீறினார்; தேசந்துவிற்கு அழைப்பாணை

இடைநீக்கம்செய்யப்பட்டபொலிஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி) தேசபந்து தென்னகோன்,நீதிமன்றஉத்தரவுகளை மீறினார் என்ற குற்றச்சாட்டிற்காக 2025 ஏப்ரல் 25 மாத்தறை நீதிவான் மன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பிணையில் உள்ள தென்னகோனை, நீதிமன்ற உத்தரவுகளைமீறியதானகுற்றச்சாட்டு விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறுமாத்தறை ☞ 2

## பொலிஸ் துறைக்கு 5000 பேர் இந்த வருடத்தில் ஆட்சேர்ப்பு

இந்த ஆண்டு 5,000 புதிய காவல்துறை அதிகாரிகளை நியமிக்கவும், அவர்களில் 2,000 பேரை அவசரமாக நியமிக்கவும் பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவுறுத்தியுள்ளார்.

மீதமுள்ள 3,000 அதிகாரிகளை டிசெம்பரில் ☞ 8

## 2019 ஈஸ்டர் தாக்குதல்களில் இறந்த 167 பேர் 'நம்பிக்கையின் சாட்சிகள்'

### வத்திக்கான் அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் நிகழ்ந்த தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த 167 கத்தோலிக்கர்களையும் 'நம்பிக்கையின் சாட்சிகள்' (நிஷ்மிஜளவிவிளவி லிக்ஷ ய்ழிஷ்மிஜ) என அதிகாரப்பூர்வமாக வத்திக்கான் நேற்று அறிவித்தது. இந்தத் தாக்குதல்கள் கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் பத்தரமுல்லை ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்கள் மற்றும் சொகுசு விடுதிகளில் இடம்பெற்றன. 'இஸ்லாமிய ஸ்டேட்' ☞ 2

## மேர்வினின் மறியல் நீடிப்பு

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசு நிலத்தை அபகரித்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூன்று பேரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மஹர நீதிவான் மன்றம் நேற்று நான்கு சந்தேகநபர்களையும் மே 05, 2025 வரை விளக்கமறியலில் வைக்க ☞ 2

## ஏப். 25இல் ரணிலிடம் விசாரணை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இந்த வாரம் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 25 காலை 09.30 மணிக்கு லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகி அவர் வாக்குமூலம் வழங்கவேண்டும்.

பதுளைமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிரான விசாரணை தொடர்பாக ரணிலிடம் ☞ 2

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கேட்டு போராட்டம்

### நீர்கொழும்பில் நேற்று பிற்பகல்

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்றுகுண்டுத்தாக்குதல்இடம்பெற்று ஆறு வருடங்கள் நிறைவடைந்தும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்பதை வலியுறுத்தி நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய சந்தியில்நேற்றும்கவனவீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**மாலை3.30மணி-முதல்சுமார்ஒருமணி நேரம் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்ட அட்டைகளை** ☞ 2




## அநுரவுக்கு சிரத்தை இருந்தால் மட்டுமே அரசியல் கைதிகள் விடுதலை சாத்தியம்

### தமிழ் அரசுத் தலைவர் சிவஞானம் இடித்துரைப்பு

அநுரசிரத்தையுடன்இருந்திருந்தால், தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்திருக்கலாம். இன நல்லிணக்கத்திற்கு இது உதவியாக இருந்திருக்கும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 8

## ஜனாதிபதி கூறியது முழுப் பொய்

### பொது ஜன பெரமுன சீற்றம்

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் மூளையாக செயல்பட்டவர் அம்பலப்படுத்தப்படுவார் என்று ஜனாதிபதியும் ஆளும்தரப்பும் கூறியது ஒரு முழுப்பொய் என்பது இப்போது முழு இலங்கைக்கும் தெளிவாகத் தெரிகிறது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த நேற்றுத் தெரிவித்தார்.

பத்தரமுல்லநெலும்மாவத்தையில்அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இந்திக அனுருத்த இதனைத் தெரிவித்தார்.

ஏப்ரல்21க்குமுன்னர்ஈஸ்டர்குண்டுவெடிப்புகளின் மூளையாக செயல்பட்டவர் யார் என்பது வெளிப்படும் என்று ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவித்து வந்தார். அதன்படி, தாக்குதலின் 5ஆம் ☞ 8

## காதி நீதிமன்ற நீதிபதி ஒருவர் லஞ்சக் குற்றச்சாட்டில் கைது

கெலியோயாவில் உள்ள காதி நீதிமன்ற நீதிபதி ஒருவர் ரூ. 200,000 லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தனது அலுவலகத்தில் இருந்தபோது நேற்றுக் காலை லஞ்ச ஒழிப்பு ஆணைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கண்டியில் உள்ள ஒரு தொழிலதிபர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. தொழிலதிபரின் மகன் தொடர்பான விவாகரத்து வழக்கில் தீர்ப்பை விரைவுபடுத்துவதற்காக காதி நீதிமன்ற நீதிபதி லஞ்சம் கோரியிருந்தார் என்று குற்றங்சாட்டப்பட்டுள்ளது.

## மைத்திரியிடம் 7 மணி நேரம் துருவித் துருவி விசாரணை

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிட்டத்தட்ட 7 மணி நேரம் வாக்குமூலம் அளித்த பின்னர் நேற்றிரவு குற்றப் புலனாய்வுத் துறையிலிருந்து வெளியேறினார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதியை தவறாகப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் ற்றும் தனிநபர்கள் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த விசாரணைக்காகவே மைத்திரிபால நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆணைக்குழு நடத்திய சந்திப்பில் இந்த அடைவே இறுதியானது என்று தெரிகிறது.

மே 6 தேர்தலை நடத்துவதில் சிக்கல்கள் எதிர்கொள்ளப்பட்டால், அதனை தாமதிக்கலாம் என்றசாரப்பட அரசியல் கட்சிகள், சுயேச்சைகள் சார்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை எப்படியும் தபால் வாக்களிப்புக்கு முன்பாகச் செய்யவேண்டியிருப்பதால் அது முடிவடைந்துவிட்டால் மே 6 தேர்தலை நடத்துவதில் சிக்கல் இருக்காது என்று ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது. ஏதாவது சிக்கல் வந்தால் தபால் வாக்களிப்புத் திகதியை மீண்டும் பிற்போட வேண்டியிருக்குமே தவிர வாக்களிப்புத் திகதி தள்ளிப்போக வாய்ப்பில்லை என்பதில் ஆணையம் உறுதியாக இருக்கின்றது.

அதேபோன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. கால தாமதம் ஆகிவிட்ட காரணத்தாலும், பல மில்லியன்கள் செலவிட்டு தேர்தல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்ட காரணத்தாலும் இனியும் வழக்குகளை விசாரித்துக்கொண்டிருக்க முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்துவிட்டது. இதனால் அந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன.

இந்த நிலையில் யாழ். மாநகர சபையில் மானில் போட்டியிட முயன்ற மணிவண்ணன் தரப்பினரும் பருத்தித்துறை மற்றும் நல்லூர் பிரதேச சபைகளில் தமிழ் காங்கிரஸும் போட்டிக் களத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஈஸ்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்தியிருந்தனர்.

இவர்கள் கடந்த பல மாதங்களாக ஒவ்வொரு 21 இந்தச் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை போராட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று போராட்டக்காரர்களோடு கலந்துரையாடினார். அத்துடன் ஊடகங்களுக்கும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

## 2019 ஈஸ்டர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ணுறீ) அமைப்பால் தூண்டப்பட்டதாகக் கருதப்படும் சஹ்ரான் குழுவினரால் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 260க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அவர்களில் தேவாலயங்கள் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட கத்தோலிக்கர்களான 167 பேரையே 'நம்பிக்கையின் சாட்சிகள்' என்று வத்திக்கான் அறிவித்துள்ளது. கொழும்பு பேராயர் கார்தினல் மால்கம் ரஞ்சித், நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டு, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

## அநுரவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாக உள்ளதாகவும், தேர்தல் மே 6 நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூராட்சி என்பது ஊருக்கான அபிவிருத்தி மற்றும் சமூக கட்டமைப்புக்கு முக்கியமானதாகும்.

அதற்காக, அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழர் பூர்வீகக் கட்சிகளைச் சேர்ந்த நபர்களையே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தமிழ் அரசுக் கட்சி இந்தமுறை வடக்கு மற்றும் கிழக்கில் 58 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்றது. சிறந்த வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் 'ஊழல் இல்லாத சபைகளுக்கே நிதி' என்ற கருத்தை எதிர்க்கின்றேன். கடந்த காலத்தில் வடக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட நிதியைத் திருப்பி அனுப்பியதாகக் கூறுவோர் அதற்கு ஆதாரம் வழங்க வேண்டும் என்றார்.

தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) இம்முறை வடக்கில் அனைத்து சபைகளிலும் போட்டியிடுகின்றது. ஆனால், இவர்களும் தென்னிலங்கையின் கட்டுப்பாடுகளில் செயல்படக்கூடியவர்களாகவே இருப்பார்கள்.

ஜேவிபி சுயாதீனக் கொள்கை கொண்டதாக கூறினாலும், அவர்கள் கடந்த தேர்தலில் வாக்குறுதியளித்தவற்றில் எதையும் நிறைவேற்றவில்லை.

அரச ஆதரவு குழுக்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கையன் உள்ளிட்டோரின் வாக்குகளை அநுரகுமார தரப்பு ஏமாற்றி வென்றது.

இனி சிங்கள மேலாதிக்கத்திற்கு வடக்கில் இடமில்லை. மக்கள் தெளிவாக செயல்பட வேண்டும்.

அரசியல் கைதிகள் விடுதலை, ஒவ்வொரு தேர்தலிலும் பேசப்படும் காட்சி உரையையே தவிர வேறு எதுவும் அல்ல. அநுர சிரத்தையுடன் இருந்திருந்தால், தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்திருக்கலாம். இன நல்லிணக்கத்திற்கு இது உதவியாக இருந்திருக்கும்.

ஜேவிபி, ஊழல் இல்லாமல் செயற்படுவோம் என கூறினாலும், தற்போது அவர்கள் ஊழலும் மோசடியும் செய்கிறார்கள் - என்றார்.

## சிறுசிறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு விசாரணை நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் எடுத்துக்கௌOளப்பட்டது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையானது கட்டளைக்கு 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சந்தேகநபர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி சுமந்திரன் தனது வாதத்தில் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வருகைதந்தபோது அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியதாக பொலிஸாரினால் ஏறாவூர் நீதிமன்றில் 36 பேருக்கு எதிராக இதேபோன்றதொரு வழக்குத் தாக்கல்செய்யப்பட்டபோது நீதிமன்றத்தால் அதற்கு முறையான ஆதாரங்கள் இல்லை என்று கூறித் தள்ளுபடி செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு மீண்டும் அதே தகவலுடன் பொலிஸாரினால் 30 பேருக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள், போராட்டத்தில் கலந்துகொள்ளாதவர்களும்கூட இணைக்கப்பட்டுள்ளனர். குறித்த வழக்கின் நீதிவான் இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் அவரின் கட்டளையொன்று அனுப்பிவைக்கப்பட்டது. அதன் பிரகாரம் குற்றப்பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு வழக்கு நடத்தப்படுகின்றது. தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழ் மக்கள் போக்குவரத்தைத் தடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டே முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இரண்டு நீதிமன்றங்கள் முன்பின் முரணான இரு கட்டளைகளை வழங்கியுள்ளன. இரண்டாவது கட்டளை முதலாவது கட்டளை இருப்பதை மறந்து சட்டத்தின் முதலாவது கட்டளையைக் கவனத்தில்கொள்ளாமல் கொடுக்கப்பட்டுள்ளது. இதே நீதிமன்றம் இதனை மாற்றமுடியும். அதனடிப்படையில் வழக்கினைத் தள்ளுபடிசெய்ய முடியும்.

வீதியைப் போராட்டக்காரர்கள் மறித்தார்கள் என்பது ஒரு சிறுவிடயம் இந்த நாட்டில் நடக்கின்ற விடயம். சிறிய விடயத்திற்கு வழக்கினை தாக்கல் செய்து அனைவரது நேரத்தினையும் வீணடித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும்.

வீதியை மறித்து போராட்டம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு ஒரு விநோதமான குற்றச்சாட்டு. ஏனென்றால் ரணில் விக்ரமசிங்க இங்கு வரும்போதுதான் அப்படி செய்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்கவே ஜனாதிபதியாக வந்தது தலைநகரில் பல இடங்களில் வீதியை மறித்துப் போராட்டம் நடத்தியதானால்தான். எனவே புதிய புதிய சிந்தனையில் விநோதமான வழக்குகளை தாக்கல்செய்து நீதிமன்ற நேரத்தினை வீணாக்கக்கூடாது - என்றார்.

சமர்ப்பணங்களைச் செவிமடுத்த நீதிவான் ஏப்ரல் 30 கட்டளைக்காக வழக்கினை ஒத்திவைத்தார்.

# அநுர வாக்குதியை மீறிவிட்டார்

## கம்மன்பில ஆதங்கம்

2025 ஏப்ரல் 21க்கு முன்னர் 'ஈஸ்டர் தின பயங்கரவாத தாக்குதலின்' சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை அவர் மீறிவிட்டார் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் வழக்கறிஞர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பு கோட்டேயில் உள்ள பிவித்துரு ஹெல உறுமய கட்சி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் நிகழ்ந்து ஆறு ஆண்டுகள் நிறைவடையும் ஏப்ரல் 21க்குள், ஈஸ்டர் தாக்குதல்களின் மூளையாக செயல்பட்டவரை ஆளும்தரப்பு அம்பலப்படுத்தத் தவறினால், கத்தோலிக்க மக்களுடன் சேர்ந்து வீதிகளில் இறங்குவோம் என்று ஆறு மாதங்களுக்குப் பிறகு கர்தினால் ஆளும்தரப்பை அச்சுறுத்தினார், இதனால் பயந்துபோன ஜனாதிபதி, மார்ச் 30 அன்று தேர்தல் மேடையில் இருந்து, ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பொறுப்பான குழுவை ஏப்ரல் 21க்கு முன்பாகத் தான் அம்பலப்படுத்துவார் என உறுதியளித்திருந்தார். அதனால் அன்றைய தினத்தில் முன்னர் ஜனாதிபதி ஏதாவது ஒரு தகவலை வெளியிடுவார் என்று பலர் எதிர்பார்த்தனர், ஆனால் ஜனாதிபதி எதையும் வெளியிடாதது மற்றொரு நிறைவேறாத வாக்குறுதியாகும் என்று கம்மன்பில கூறினார்.

# தேர்தல் ஆணையம் ஜனாதிபதிக்கு கடிதம்

'கிளீன் சிறீலங்கா' திட்டத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு எந்தத் தடையும் இல்லை என்றாலும், கண்டியில் உள்ள தலதா மாளிகை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 'கிளீன் சிறிலங்கா'வுடன் தொடர்புடைய பதாகைகளைக் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணையம் ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணையம் எழுதியுள்ள கடிதத்தில் இந்த விவரத்தைத் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும்தரப்புக்கு சாதகமான அரசியல் முன்னேற்றத்தை ஏற்படுத்த இது வழி வகுக்கும் என்பதால் அவற்றை அகற்றுமாறு ஆணையம் பணித்துள்ளது.

உள்ளூராட்சி ஆணையர் சமீபத்தில் தேர்தல் ஆணையத்திடம், தலதா மாளிகை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 'கிளீன் சிறீலங்கா' திட்டம் தொடர்பான கொடிகளைக் காட்சிப்படுத்த அனுமதி வழங்குமாறு கோரியிருந்தார்.

## நீதிமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

ஏப்ரல் 10 பிணை வழங்கப்பட்ட பின்னர், தென்னகோன் மாத்தறை நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறும்போது நீதிமன்ற உத்தரவுகளை மீறியதாக சட்டமா அதிபர் இன்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததை அடுத்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு வெளியே அவரை அழைத்துச் செல்ல பயன்படுத்திய காரின் உரிமையாளரும் குறிப்பிட்ட நாளில் மாத்தறை நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு வெலிகமவில் உள்ள ஒரு பிரபல ஹோட்டல் முன் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தேசபந்து தென்னகோன் தேடப்பட்டு வந்தார். தலைமறைவாக இருந்த அவர் பின்னர் நீதிமன்றில் சரணடைந்தார். இந்தச் சம்பவத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவர் இறந்தார் மற்றும் மற்றொருவர் காயமடைந்தார்.

கொழும்பு குற்றப்பிரிவு (ஏீஏீம்), வெலிகம காவல்துறை மற்றும் சிறப்புப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டைத் திட்டமிட்டார் என்று தேசபந்து மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு நினைவு நாளில் ஜனாதிபதி ஒரு சிறப்பு அறிவிப்பை விடுத்துத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவார் என்று பலரும் நம்பினர். ஆனால் ஜனாதிபதி ஏமாற்றிவிட்டார்.

தற்போதைய ஆளும்தரப்பு 'ஈஸ்டர்' தாக்குதல்கள் மூலம் இலங்கை பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்ததாக குற்றம் சாட்டுகிறது. இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியே அவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சில மணி நேரங்களுக்குள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று கூறினார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

தனது வாக்குறுதிகளை மீறியதன் மூலம், ஜனாதிபதி கத்தோலிக்க திருச்சபைக்கும், கர்தினாலுக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் பெரும் அநீதி இழைத்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலின்போது ஈஸ்டர் தாக்குதல்களை அப்பாவி மக்களை காயப்படுத்த அவர் மீண்டும் மீண்டும் பயன்படுத்தினார். பொதுத் தேர்தலின் போது, ஜனாதிபதி அநுரகுமார தேவாலய பலிபீடத்தில் இருந்த பாதிரியார்களிடம் திசைகாட்டிக்கு வாக்களிக்குமாறு பலமுறை கேட்டுக்கொண்டார். அத்தகைய அறிக்கையை வெளியிட்ட ஜனாதிபதி, ஆறு மாதங்களுக்குப் பிறகு ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை விசாரணைக்காக சிஐடியிடம் ஒப்படைப்பதாக அறிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஜனாதிபதி ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஈஸ்டர் தாக்குதல்களை மனதில் கொண்டு ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்குகளை கோருகிறதா என்ற சந்தேகம் எழுகிறது..

ஈஸ்டர் தாக்குதல்களுக்கு ராஜபக்ச முகாமை காரணம் காட்டுவது ஆ-ளும்தரப்பின் முயற்சியாக மாறியுள்ளது, கர்தினால் மற்றும் கத்தோலிக்க மக்கள் மூலம் ராஜபக்சக்கள் மீதான தனது தனிப்பட்ட வெறுப்பை ஜனாதிபதி வெளிப்படுத்த முயற்சித்தால், அவர் அவ்வாறு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார் என்றும் இந்திக அனுருத்த மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியமர்த்த திட்டமிட்டுள்ளதாக அமைச்சகம் கூறுகிறது.

காவல்துறைத் தலைவர்கள் உள்ளிட்ட மூத்த காவல்துறை அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட நிகழ்நிலை (ஒன்லைன்) கலந்துரையாடலின் போது அமைச்சர் இதை வெளிப்படுத்தினார்.

காவல்துறை அதிகாரிகளுக்கு தனி சம்பள அமைப்பை தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

## மேர்வினின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மார்ச் மாதம் பத்தரமுல்லையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்தபோது குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படுதல்வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. வலியுறுத்து

தங்களது அரசியல் தேவைகளுக்காக, ஆட்சிகளை கொண்டுவருவதற்காக, ஆட்சிகளை உருவாக்குவதற்காகசிலரால்முஸ்லிம்இளைஞர்களை திசைதிருப்பி இவ்வாறு மிக மோசமான செயலை மேற்கொண்டிருந்தார்கள் என்றும் இதன் மூலம் முழு முஸ்லிம்சமூகமும்தலைகுனிந்துநிக்கவேண்டியநிலை ஏற்பட்டதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத்தெரிக்கையிலேயே இவ்வாறு தெரித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிகையில் -

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அவர்களுடையகுடும்பங்களுக்காகபிராத்திக்கிறோம். நாங்கள் மிகவும் மனவேதனை அடைந்தோம். இன்னமும் அந்த வேதனை அடைகிறோம்.

காத்தான்குடி பிரதேசம் அநியாயமாக பல சோதனைகளையும் சவால்களையும் சந்திந்தது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

தற்போதுதான், சில உண்மைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. யார் பின்னணியில் இருந்தார்கள், யார் இதை செய்தார்கள் போன்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதோடு, உயிர்த்த


ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உலர் உணவுப் பொதி வழங்கிவைப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள், இளைஞர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பொருளாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் அவர்களின் தலைமையில் சனிக்கிழமை கல்முனை மயோன் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வானது ரஹ்மத் மன்சூர் அவர்கள் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின்ஏற்பாட்டில்பாகிஸ்தானியஉயர்ஸ்தானிகர் அதிமேதகு பாஹிமுல் அஸீஸ் அவர்கள் கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டு அவரது கரத்தினால் பொருள்களை பயனாளர்களுக்கு வழங்கி இந்நிகழ்வை சிறப்பித்தார்.

மேலும் அதிதிகளான பாகிஸ்தானிய இலங்கைக்கான ஆலோசகர் நும்மான் ரஷீட் ஹயானி, கல்முனை சமூக சேவை உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஜெய்ஸான், கல்முனை சிவில் சமூக சேவை பொலிஸ் பொறுப்பதிகாரி எம். வாஹித் மற்றும் நூதுவரின் பாரியாரும் மற்றும் ஊடகவியலாளர்கள், பவுண்டேசன் உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.








## மருதமுனை பிரதேச உள்ளகத்தில் வீதிகள் கொங்கிறீட்டாக மாறின

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் ரி-100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். அதன் ஓர் அங்கமாக மருதமுனை பிரதேச உள்ளக வீதிகள் மழை காலங்களில் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றனவாக உள்ளதை நிவர்த்திக்கும் வகையில் தனது ரி- 100 திட்டத்தின் கீழ் மருதமுனை அக்பர் வீதியின் குறுக்கு வீதியான 'கலாபூசணம் பீ.எம்.எம்.ஏ. காதர் வீதி' மற்றும் 'மக்பூலியா வீதி' ஆகியவற்றை கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்க சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நடவடிக்கை எடுத்திருந்தார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் ரி- 100 திட்டத்தின் கீழ் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ள இந்த வீதிகளை முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் நேரில் சென்று பார்வையிட்டதுடன் மேலும் இந்த பிரதேசத்தில் முன்னெடுக்கவேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின்




வெகுஜனமக்கள்தொடர்பாடல்செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி ஹரீஸின் இணைப்பாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## 1000 போதை மாத்திரைகளுடன் சாவகச்சேரியில் ஒருவர் கைது

(சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் ஞாயிற்றுக் கிழமைஇரவுஆயிரத்துப் பத்து போதை மாத்திரைகளுடன்இளைஞன் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைமாத்திரைகளை மறைத்து வைத்திருப்பதாக பொலிஸாருக்குகிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்அடிப்படையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் ஆலோசனைக்கு அமைவாக-உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நம்பிக்கையை கட்டியெழுப்புதல்

**இலங்கை ஜனநாயகத்தின் புதிய முகமாக கருதப்படும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கடந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, மக்கள் நம்பிக்கையைப் பெற்றார். ஆனால் 6 மாதங்களுக்குள் அந்த நம்பிக்கையை அவர் மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கியிருக்கிறார். அவரது வெற்றி, பழைய அரசியல் குடும்பங்களின் ஆதிக்கத்தை முறியடித்த முக்கியமான நிகழ்வாக இருந்தபோதும், அதனைத் தக்க வைப்பதற்குப் பதில் அநுரவின் அரசியல் தூய்மை மீதும் சந்தேகங்களை ஏற்படுத்தும் விதத்தில் அவர் நடந்துகொள்கிறார்.**

**கண்டியில் நடந்துவரும் புத்தரின் புனித எச்சங்களைப் பார்வையிடுவதற்கான நிகழ்வையொட்டி அங்கு 'கிளீன் சிறீலங்கா' திட்டத்தின் பதாகைகளைக் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அவரது செயலாளருக்குத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் இது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.**

**இந்நிலையில், அரசுத் தலைவரின் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு இரண்டாவது முறையாகப் முறைப்பாட்டில் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதன் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கத் தயங்கி இருப்பது அதன் சுயாதீனத் தன்மை குறித்த கேள்விகளையும் அரசுத் தலைவர் அதிகாரம் பயன்படுத்தப்படும் விதம் குறித்த கேள்விகளையும் எழுப்பியுள்ளது.**

**இந்தப் புகாரில், ஜனாதிபதி திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தியின் (NPP) தேர்தல் பரப்புரைகளில், தமது கட்சி கைப்பற்றும் உள்ளாட்சிச் சபைகளுக்குக் கண்ணை மூடிக்கொண்டு நிதி வழங்கப்படும் என்றும் ஏனைய சபைகளுக்கு நிதி ஒதுக்க ஒன்றுக்குப் 10 தடவைகள் யோசிப்போம் என்றும் கூறியிருந்தது தேர்தல் விதி மீறல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இவ்வாறு, அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, வாக்காளர்களை பாதிப்பது, தேர்தல் சட்டங்களை மீறும் செயல் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் கேள்விக்குள்ளாக்குகிறது என்பதே முறைப்பாட்டிற்கான அடிப்படை.**

**ஜனாதிபதி திசாநாயக்க, கடந்த ஆண்டு நடந்த தேர்தலில், பழைய அரசியல் குடும்பங்களின் ஆதிக்கத்தை முறியடித்து, மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர் . ஆனால், தற்போது எழுந்துள்ள தேர்தல் விதிமீறல் புகார்கள், அவரது அரசியல் நம்பிக்கையை சோதிக்கின்றன.**

**தேர்தல் ஆணையம், இந்தப் புகார்களைச் சுயாதீனமாகவும், விரைவாகவும் விசாரித்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.**

**இது, தேர்தல் முறையின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் முக்கியமான கட்டமாகும்.**

**ஜனாதிபதி திசாநாயக்க, தனது அரசியல் நம்பிக்கையை நிலைநாட்ட, தேர்தல் விதிமீறல்களில் ஈடுபடாமல், ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.**

**இது, அவரது அரசியல் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும்.**

**இலங்கை, கடந்த காலத்தில், அரசியல் அதிகாரத்தின் தவறானபயன்பாட்டால்பலபிரச்சினைகளைஎதிர்கொண்டது.**

**இப்போது, புதிய ஜனாதிபதி, புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி, ஜனநாயகத்தை வலுப்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும்.**

**தேர்தல் விதிமீறல்கள் தொடர்பான புகார்கள், ஜனநாயகத்தின் நம்பிக்கையை சோதிக்கின்றன. அவற்றைச் சுயாதீனமாகவும், விரைவாகவும் விசாரித்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.**

**இது, இலங்கையின் ஜனநாயகத்தை பாதுகாக்கும் முக்கியமான கட்டமாகும்.**

# பிரிவுபசார நிகழ்வு

*(அஸ்லம் எஸ்.மௌலானா)*

*கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றி, கல்முனை வலய கல்விப் பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் அபிவிருத்தி உத்தியோகத்தரான எஸ். சந்திரகுமாருக்கு நிதிப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.*

*கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்வன், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம். பாஸித், வருமான பரிசோதகர்களான ஏ.ஜே. சமீம், எம்.எஸ்.எம். உபைத் உட்பட முகாமைத்துவ சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.*

*இதன்போது கடந்த 05 வருட காலமாக மாநகரசபையின் பொருள்கொள்வனவுக்கான பொறுப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிய எஸ். சந்திரகுமார் அப்பணியை மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் சிறப்பாக மேற்கொண்டதாக பாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன் நினைவுப் பரிசில் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.*

# திருமலையில் குருதிக்கொடையும் தொற்றா நோய் விழிப்புணர்வும்

*(ஹஸ்பர்)*

*அகில இலங்கை சுதேச மருத்துவ எதிர்கால சேவை சங்கத்தின் தலைமையில் திருகோணமலையில் இரத்ததானமும், தொற்றா நோய் விழிப்புணர்வும் திருகோணமலை பெரிய கடை நகர சபை வளாகம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஒரு முக்கிய சமூகப் பணிக்கு அரங்காக அமைந்தது.*

*அகில இலங்கை சுதேச மருத்துவ எதிர்கால சேவை சங்கத்தின் தலைமையில், ஒரு சிறப்பான இரத்ததான முகாம் மற்றும் தொற்றா நோய்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.*

*இந்தநிகழ்வின்மூலம், சுதேசமருத்துவர்கள் தங்களுடைய சமூக பங்களிப்பை உறுதியாக வெளிப்படுத்தினர். இரத்ததானத்தில் பெரும்பான்மையினர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களுடைய இரத்தத்தை தானமாக வழங்கினர்.*

*இத்துடன், தொற்றா நோய்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் பயனுள்ள விழிப்புணர்வு அமர்வும் இடம்பெற்றது.*

*இந்நிகழ்வின் போது, ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பில், சுதேச மருத்துவர்களுக்கு அரச நியமனம் வழங்கப்பட வேண்டிய அவசியம் குறித்து உரையாடப்பட்டது.*

*நாட்டில் இறக்குமதியாகக் கொண்டு வரப்படும் வைத்திய முறைகளைவிட, சொந்தமான சுதேச மருத்துவ முறைகளை ஊக்குவிப்பதன் மூலம் நாடு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கான வாய்ப்பு உண்டு என சுட்டிக்காட்டப்பட்டது.*

*இந்த நிகழ்வு, சுதேச மருத்துவத்தின் சமூக பங்களிப்பையும், நாட்டின் சுகாதார எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் பார்வையையும் அழுத்தமாக வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைந்தது.*

# சமூக சேவையாளர்களுக்கு நிரந்தவூரில் கௌரவிப்பு

*(ஷினாஸ்)*

*தார்மீக சமூகத்திற்கான சமூக விழிப்புணர்வு அமைப்பான தம்ஸ் ஸ்ரீ லங்கா அமைப்பால் சமூகத்தில் ஒழுக்கமான கௌரவமாக வாழக்கூடிய எதிர்கால சந்ததிகளைஉருவாக்கிதெளிவானபுரிதலோடு எதையும் எதிர்கொண்டு சமாளிப்போம் சாதிப்போம் எனும் நோக்கத்தோடு இளம் தலைமுறையின் அங்கத்தவர்களால் முன் கொண்டுசெல்லப்படும் ஒரு சமூக அக்கறையுள்ள அமைப்பாகும்.*

*இந்த அமைப்பானது பல்வேறுபட்ட சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. அதில் ஓர் அங்கமாக ஆண்டுதோறும் சமூக சேவை சார்ந்த தனி நபர்களையும் நிறுவனங்களையும் அவர்களது சமூக சேவையை பாராட்டி கௌரவித்து வருகிறது. அந்த வகையில் இவ்வருடமும் கடந்த பல தசாப்தங்களுக்கும் மேலாக எமது சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை செய்த சிரேஷ்ட சமூக சேவையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புக்களை கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அமைப்பின் தலைவர் ஏ.ஜே.ஜனூபர் தலைமையில் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.*

*இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப், ஆகியோர் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக நிந்தவூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.சிஹாபுதீன், நிந்தவூர் பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் குரூஸ் குணரத்னம் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.*

*நிகழ்வின் போது அதிதிகளினால் மிக நீண்ட காலமாக சமூக சேவையில் ஈடுபட்டு வரும் மக்கள் மனங்களில் வாழும் பிரபல சமூக சேவையாளர்கள் மற்றும் சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு மறைந்தவர்கள் என சுமார் 60 பேருக்கு இங்கு விருது வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.*

*இந்த நிகழ்வில் விருது வழங்கிய பாராட்டி கௌரவிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சம்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பின் நிர்வாகத்தினர் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.*

காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளூர் சுற்றுலாவிகளை கவரும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## சுயேச்சை வேட்பாளர் நளீர் தெரிவிப்பு

(ஹாரீஸ்)

நாவிதன்வெளி பிரதேசத்தின் சாளம்பைக்கேணி வடக்கு வட்டாரத்தில் சுயேச்சை குழு -1 கால்பந்து சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் மக்கள் சந்திப்பு முதலாம் வட்டாரத்தில் சர்ச்சை வேட்பாளர் சவுதியா தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

சுயேட்சை குழு தலைமை வேட்பாளர் எம்.ஏ. நளீர் இங்கு விஷேட உரை நிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து தனது உரையில் -

நாவிதன்வெளி பிரதேசத்தில் காணப்படுகின்ற குறைகளை உடனடியாக கண்டறிந்து அதற்கான தீர்வுகளை முன்னெடுக்கவும், மாணவர்களின் கல்விக்கு அரசாங்கம் வழங்கும் நிதிகளுக்கு மேலதிகமாக பல தொண்டு நிறுவனங்களின் நிதிகளை கொண்டு வந்து கல்வி நடவடிக்கைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்ளவும், எமது பிரதேசத்துக்கு வருகின்ற உள்ளூர் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவும், பிரதேசத்தில் காணப்படுகின்ற பாதைகளை புனர்நிர்மாணம் செய்து அவற்றுக்கான வீதி விளக்குகளை பொறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் சுயேச்சை தலைமை வேட்பாளர் எம் ஏ நளீர் தெரிவித்தார்.

மேலும் நாங்கள் ஆட்சி அதிகாரங்களில் இல்லாத போதும் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு பல்வேறு வேலை திட்டங்களை செய்து காட்டியுள்ளோம். வீடமைப்பு, நீர் வளங்கள், மின்சாரம், வாழ்வாதார உதவிகள் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு உதவி திட்டங்களையும் வழங்கி வந்துள்ளோம். தற்போது அதிகாரங்கள் கிடைக்கப்பெறுகின்ற போது உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் பல்வேறு பணிகளை செய்யத் தயாராகி வருகின்றோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்களின் அமோக வாக்குகளின் ஊடாக வெற்றி பெற்று மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்ய எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். இதற்கான முழு அங்கீகாரத்திளையும் வழங்கி எங்களின் சுயேட்சை குழு-01 கால்பந்து சின்னத்திற்கு வாக்களித்து மக்கள் எங்களை வெல்ல வைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் ஏ. கே அப்துல் சமத், நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சுபைதீன் மற்றும் கால்பந்து சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ். குடாநாட்டில் மூதாட்டி ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை

யாழ்ப்பாணத்தில் 69 வயதான மூதாட்டி ஒருவர் பொல்லினால் தாக்கி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் உள்ள வீடொன்றினுள் திருடும் நோக்குடன் சென்ற இளைஞனே மூதாட்டியை தாக்கி படுகொலை செய்துள்ளார் எனும் குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

குறித்த வீட்டில் இரண்டு மூதாட்டிகள் வசித்து வருகின்றனர். அதில் ஒருவர் 20ஆம் திகதி காலை உயிர்த்த ஞாயிறு பிரார்த்தனைக்காக தேவாலயத்திற்கு சென்றுள்ளார். மற்றையவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

அந்நிலையில் இரு மூதாட்டிகளும் தேவாலயத்திற்கு சென்றுள்ளார்கள் என நினைத்து , இளைஞன் வீட்டினுள் களவுக்கு சென்றுள்ளார்.

அவ்வேளை வீட்டில் இருந்த மூதாட்டி இளைஞன் களவில் ஈடுபடுவதை அவதானித்ததை அடுத்து இளைஞன் பொல்லினால் மூதாட்டியை தலையில் பலமாக தாக்கி விட்டு தப்பி சென்றுள்ளார்.

இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

அந்நிலையில், தேவாலயத்திற்கு சென்ற மற்றைய மூதாட்டி வீட்டிற்கு வந்த போது மூதாட்டி இரத்த வெள்ளத்தில் சடலமாக காணப்பட்டதை அவதானித்து அயலவர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த தடயவியல் பொலிஸார் அயல் வீட்டு இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.



# நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசுடன் இணைந்து வேலை செய்யத் தயாராக இருக்கின்றோம்

## சத்தியலிங்கம் எம்.பி. பகிரங்கம்

நாட்டின் பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் மாற்றுங்கள் என்று அரசாங்கத்தை கூறுவது இயலாத விடயம். அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதற்கு நாங்களும் இணைந்து வேலை செய்யத் தயாராகஇருக்கிறோம்எனதமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இலங்கைதமிழரசுக்கட்சியின்பிரதேசதேர்தல் காரியாலயம் வவுனியா மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை) திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கை தமிழரசுக்கட்சி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இது ஓர் எல்லைப்புற மாவட்டம். இதன் இனப்பரம்பல் கணிசமான அளவு மாற்றப்பட்டிருக்கிறது. எந்த அரசாங்கம் வந்தாலும் இந்த செயற்திட்டம் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது.

தற்போது இந்த ஆட்சிமாற்றம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணம் நாட்டின் பொருளாதார பிரச்சினையே. கடந்தகால ஆட்சியாளர்கள் விட்ட தவறே ஜே.வி.பி. என்ற என்.பி.பி. ஆட்சியமைப்பதற்கு காரணமாக இருந்தது.

இலங்கை மக்கள் என்ற வகையில் பார்த்தால் ஊழல் இல்லாத ஓர் ஆட்சி, மக்களுடைய சொத்தை கொள்ளை அடிக்காத அரசாங்கமும், ஆட்சியாளர்களும் இருக்க வேண்டியது அனைவருக்கும் பொதுவான ஒரு பிரச்சினை.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரை இதைவிட மேலதிகமாக இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்கிறது. இந்த அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்தைக் காண்பதற்குரிய முதற்படிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நாங்கள் நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் ஆதரவு அளிக்கலாம்.

ஆனால்எமது அரசியல்போராட்டத்திற்கான தீர்வு கிடைக்கும் வரையில் தமிழ் மக்களாகிய நாங்கள் விடிவு நோக்கிய பயணத்தில் மாற்றமில்லாமல் தொடர்ந்து பயணிக்க வேண்டிய கடமை இருக்கிறது. தற்போதைய அரசுக்கு பயங்கவரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனை நீக்காமல் இப்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதேபோல அண்மையில் வவுனியாவில் மக்களின் சொந்த காணிகளுக்குள் வனவளத்திணைக்களம்எல்லைபோடுகின்றமை தொடர்பாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.நான்அங்குசென்றமையால் அதனைத் தடுக்கமுடிந்தது. ஏன் அரசாங்கத்தால் இதனை செய்யமுடியாது.

இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த காணிகளுக்குள் செல்வதை இந்தத் திணைக்களம் எதற்காக தடுக்கிறது. வவுனியா பூவரசங்குளம் பகுதியில் உள்ள மக்கள் இது தங்களுக்குரிய காணி என்று தெரிவித்த போது அங்கு நின்ற வனவளத்திணைக்கள அதிகாரி தனது துப்பாக்கியை எடுத்து காட்டியுள்ளார். நான் அவர்களை எச்சரித்திருந்தேன்.



இதன் மூலம் அடக்கு முறை அரசியலை செய்வதற்கு அரசாங்கம் மாறினாலும் அரச நிர்வாகம் மாறவில்லை என்பது புலப்படுகிறது. அதனை மாற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

நாட்டின் பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் மாற்றுங்கள் என்று கூறுவது இயலாத விடயம். அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதற்கு நாங்களும் இணைந்து வேலை செய்யத் தயாராக இருக்கிறோம். அது பொதுவான பிரச்சினை. ஆனால் இந்த மக்களின் காணி விடயங்களில் நிதி செலவழிக்காமல் உடனடியாக தீர்வினை வழங்கமுடியும். அதனை செய்ய ஏன் தயங்குகின்றனர். இந்த நிர்வாகங்களைக் கையாள முடியாத கையாலாகாத அரசாங்கமாகவே இது இருக்கிறது என்று தெரிவித்தார். 100

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# வவுனியா விபுலானந்தா கல்லூரி மைதான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும்

## பிரதமர் உறுதி தெரிவிப்பு



வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு விரைவில் விளையாட்டு மைதானம் பெற்றுக் கொடுக்கப்படும் என பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு பிரதமருடன் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது, வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் அதற்கான ஒரு நிரந்தர மைதானம் இதுவரை இல்லை என்பது வலைக்குரிய விடயம்.

மைதானத்திற்கான நிலம் ஒன்றைக் கொள்வனவு செய்ய நீண்ட நாள்களாக பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் இது வரை அது கைகூடவில்லை. கடந்த காலங்களில் அரச அதிகாரிகள், பல அரசியல்வாதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி மைதானத்தை பெற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதும் இதுவரை அது கைகூடவில்லை.

தற்போதைய கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் என்ற அடிப்படையில் இப் பாடசாலையின் மைதானப் பிரச்சினைகது தீர்வைப் பெற்றுத் தருமாறு பாடசாலை நிர்வாகத்தால் பிரதமரிடம் இதன்போது கோரப்பட்டது.

பாடசாலை தொடர்பில் கேட்டறிந்த பிரதமர் மைதானப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். மாணவர்களுக்கான மைதானம் விரைவில் பெற்றுத்தருவாக இதன்போது உறுதியளித்தார். இந்தச் சந்திப்பில் பிரதமருடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன் மற்றும் செ.திகலகநான் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 100

# இளைஞர்களைக் கொண்டு இளைஞர்களை பயிற்றுவித்தல்

(சியாஜ்)

புத்தளத்தில் பல்வேறு முன்மாதிரி வேலை திட்டங்களை 2019 இல் இருந்து முன்னெடுத்து வரும் தாருஸ்ஸலாம் இளைஞர் அணியானது இம்முறை இளைஞர்களைக் கொண்டு இளைஞர்களை பயிற்றுவித்தல் என்ற தொணிப் பொருளில் மூன்று நாள் பயிற்சி நெறியை அண்மையில் நடத்தி இருந்தது.

இதிலே சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பெற்றதோடு இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்களுள் ஒருவரான நிஹ்மதுல்லா நிலோபர், தாருஸ்ஸலாம் இளைஞர் அணியின் ஆலோசனைக் குழு உறுப்பினரும், புத்தளம் எஸ்.ஈ.சீ.கல்வி நிலைய உரிமையாளருமான ஆசிரியர் ஏ.சீ.எம். ரிபாயிஸ், ஆலோசனைக் குழு உறுப்பினர்களுள் ஒருவரும் எக்ஸலன்ஸ் பாடசாலை அதிபருமான எச்.அஜ்மல், புத்தளம் பெரிய பள்ளியின் செயலாளர் சட்டத்தரணி அஸீம், புத்தளம் மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம்.பர்ராஜ், பிரபல உளவல ஆலோசகர் அஷ்ஷெய்க் இஹ்ஸான் ஹாமித், ஆசிரியர் ஆசிரியர் ஹகீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்விலே மாணவர்கள் பெற்றோர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.



# சக வாழ்வுக்கான நினைவு கூறல் சின்னம் புத்தளத்தில் திறப்பு

(சியாஜ்)

புத்தளம் பாலாவியில் உள்ள முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகமும், மகளிர் எழுச்சி குரல் சங்கத்தவர்களும் இணைந்து புத்தளம் சோல்டன்- 01 முஹாஜிரீன் ஜும்ஆ பள்ளி வாசல் வளாகத்தில் 1990 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக வடமாகாணத்திலிருந்து விடுதலை புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட இம் மக்களை புத்தளம் மக்கள் வரவேற்று அரவணைத்ததமையை நன்றி உணர்வோடு நினைவு கூரும் வண்ணம் இலங்கை வரலாற்றில் முதலாவது நினைவுச் சின்னமாக புத்தளத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) திறந்து வைக்கப்பட உள்ளது.

புத்தளம் பாலாவி பெண்கள் நம்பிக்கையகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜுவைரியா தலைமையில் இடம்பெற உள்ள நிகழ்வானது ஒரு வரலாற்று சான்றாகவும் அமையும்.

அன்றைய இந்த பலவந்த வெளியேற்றம், ஒரு சம்பவமாக இருக்கக்கூடாது. இது ஒரு வரலாற்று நிகழ்வாக கருதப்பட வேண்டும். எமது எதிர்கால சந்ததிகளுக்கும் கதை கூறுவதற்கான வரலாற்று மூலாதாரமாகவும் அமைய வேண்டும் என்ற அடிப்படையிலும் குறித்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு

### வவுனியாவில் நடந்தது

வவுனியாவில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

வவுனியா இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளர் நாயகமுமான ந.சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் வவுனியா மாநகர சபை உட்பட நான்கு





உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்றது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் பிரதிநிகள் ஜனநாயக போராளிகள் கட்சியின் பிரதிநிகள் மற்றும் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். 100

# அஷ்ரப்பின் கனவை முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் நிறைவேற்றவே இல்லை

### அதனாலேயே வெளியேறினோம் என்கிறார் கலாநிதி ஷெரீப்

(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எம்.எச்.எம்.அஷ்ரப்பின் கனவை முழுமையாக நிறைவேற்றாத காரணத்தால் தான் நாங்கள் அனைவரும் வெளியேறினோம். அந்த கனவில் தென்கிழக்கு அலகு ஒன்றை மாவட்டத்தில் உருவாக்க வேண்டும் என்ற அவருடைய ஆசை ஒன்று இருந்தது. அதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஏன் தென்கிழக்கு அலகு மாவட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கரையோர மாவட்டம் என்றால் என்ன. நமக்கு ஏதாவது ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சென்றால் அம்பாறைக்கு தான் போக வேண்டும் சிங்களத்தில் பேச வேண்டும். சகோதர இனங்களுடன் இணைந்து தான் எதையும் செய்ய வேண்டும். ஆனால் எங்களுடைய மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் அப்படிப் போகத் தேவையில்லை நீங்கள் கரையோர மாவட்டத்திலே உங்களுக்கென்று ஒரு கச்சேரியை உருவாக்கி தருவோம் என்றார். ஆனால் இன்று அதுவும் இல்லை இதன் காரணமாகத்தான் நாங்கள் ஒரு முடிவெடுத்து ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினோம் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவரும் தொழிலதிபருமான கலாநிதி ஹக்கீம் செரீப் தெரிவித்தார்.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2025 காரைதீவு பிரதேச சபைக்கான மாளிகைக்காடு மேற்கு வட்டாரத்துக்கான வெற்றி வேட்பாளர் எஸ்.எச்.எம்.சாஜித்தை ஆதரித்து தேர்தல் காரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் –

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து ஐக்கிய சமாதான கூட்டமைப்பு பிரிந்துஉருவாக்கப்பட்ட கட்சி இதுவாகும். எதிர்வரும் தேர்தலில் இலங்கையின் பல மாவட்டங்களில் இந்த ஐக்கிய சமாதான கூட்டமைப்பு களமிறங்கி இருக்கின்றது. இந்த ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து ஏன் பிரிந்தது. மர்ஹூம் எம்.எச்.சம். அஷ்ரப் அவர்கள் இருந்த காலத்தில் தாய்மார்களுக்கும் இளைஞர்களுக்கும் என்ன செய்ய நினைத்தாரோ அது எதுவும் தற்போது நடைபெறவில்லை. அதாவது இப்போது அக்கட்சியில் இருக்கின்ற தலைமையால் எதுவும் செய்ய முடியாத காரணத்தால் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நாங்கள் பிரிந்தோம். அது உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று நினைக்கின்றேன். எங்கள் செயலாளர் நாயகம் ஹசன் அலி அவர்கள் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற போது தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களுடன் நெருங்கி செயற்பட்டவர். அது போன்று எமது கட்சி தவிசாளர் பசீர் சேகு தாவூத் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டு எதையும் சாதிக்க முடியாது என்று கூறி அக்கட்சியில் இருந்து வெளியேறி விட்டார். அதைத் தொடர்ந்து நாங்களும் அந்த கட்சியில் இருந்து வெளியேறினோம். இது தான் உண்மை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எம்.எச்.எம்.அஷ்ரப்பின் கனவை முழுமையாக நிறைவேற்றாத காரணத்தால் தான் நாங்கள் அனைவரும் வெளியேறினோம். அந்த கனவில் தென்கிழக்கு அலகு ஒன்றை மாவட்டத்தில் உருவாக்க வேண்டும்என்ற அவருடையஆசைஒன்று இருந்தது. அதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஏன் தென்கிழக்கு அலகு மாவட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கரையோர மாவட்டம் என்றால் என்ன. நமக்கு ஏதாவது ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சென்றால் அம்பாறைக்கு தான் போக வேண்டும் சிங்களத்தில் பேச வேண்டும். சகோதர இனங்களுடன் இணைந்து தான் எதையும் செய்ய வேண்டும். ஆனால் எங்களுடைய மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் அப்படிப் போகத் தேவையில்லை நீங்கள் கரையோர மாவட்டத்திலே உங்களுக்கென்று ஒரு கச்சேரியை உருவாக்கி தருவோம் என்றார் ஆனால் இன்று அதுவும் இல்லை இதன் காரணமாகத்தான் நாங்கள் ஒரு முடிவெடுத்து ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினோம்.

இன்று இந்த ஐக்கிய சமாதான கூட்டமைப்புகொழும்புமாவட்டத்திலும் புத்தளம் மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் எமது கட்சி சார்பில் இந்த தேர்தலில் பல ஆசனங்களை வெற்றி பெறச் செய்வோம் அதனை தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபையில் இரண்டு ஆசனங்களை கைப்பற்றுவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்தவர்கள் இதுவரை என்ன செய்திருக்கின்றார்கள். அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்தவர்கள் எதைச் செய்தார்கள். அவர்கள் உங்களுக்கு ஏதாவது ஒன்றை செய்திருந்தால் இங்கு நாங்கள் வரத் தேவையில்லை. உங்களது பெறுமதியான வாக்குகளை அவர்களுக்கு வழங்கி விட்டு இன்று எதைசாதித்துஇருக்கிறீர்கள். எதையுமே சாதிக்கவில்லை . நாங்கள் எமது கட்சியின் சார்பாக இன்று இளைய தலைமுறைக்கு இடம் கொடுத்துள்ளோம். இந்த வட்டாரத்திற்கு ஒரு இளைஞனை களமிறக்கி இருக்கின்றோம். நாளை அந்த சாஜித் என்ற இளைஞன் காரைதீவுசபையில் இருக்கின்றபோது உங்களுக்காக குரல் கொடுப்பார்.

எனவேநீங்கள்அவரைஆதரிக்க வேண்டும். நாங்கள்கூறிஉங்களுக்கு அவரை தெரியவேண்டியது இல்லை. அவர் உங்களுடன் இருக்கின்றவர். உங்களுடன் வாழ்ந்து வருபவர். நாங்கள் எதிர்வரும் தேர்தலில் இரண்டு ஆசனங்களை காரைதீவு பிரதே சபையில் பெற்றுக் கொள்வது உங்கள்கைகளில்தான்இருக்கின்றது. – என்றார்.

இந்நிகழ்வில் வட்டாரங்களின் வேட்பாளர்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நெடுங்கேணியில் பிரதமர் உள்ளாட்சி தேர்தல் பரப்புரை

தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமர் கலாநிதி ஹிரிணி அமரசூரிய அவர்களின் பங்கேற்புடன் நெடுங்கேணி பொதுக் கூட்டம் இடம்பெற்றது.



வவுனியா மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசியமக்கள்சக்தியின்கீழ் வவுனியாமாவட்டத்தில்உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும்வகையில்பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா வடக்கு பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி வவுனியா, நெடுங்கேணி பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலந்து கொண்டார்.

இப் பொதுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வவுனியா வடக்கு பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குப்பைமேடாக மாறும் நுவரெலியா

சுற்றுலாத்தலமான நுவரெலியாவிற்கு தினமும் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இதில் ஏப்ரல் மாதத்தில் முதலாம் திகதி முதல் முப்பதாம் திகதி வரை வசந்த கால கொண்டாட்டம் நடைபெறுவதால், அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இயற்கை எழில் சூழ்ந்த நுவரெலியா தற்போது எங்கும் குப்பை குவியல்களும், பிளாஸ்டிக் கழிவுகளும் நிறைந்து காணப்படுகின்றன.

மேலும் அதிகமாக சுற்றுலா பயணிகள் கூடும் மையங்களில் குப்பை தொட்டிகளை வைக்க நடவடிக்கை எடுக்காதது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சுற்றுச்சூழல் மாசுப்படுவதுடன், இயற்கையும் பாதிக்கப்படுகிறது.

இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் உணவை சாப்பிட்டு முடித்துவிட்டு, எஞ்சிய உணவுக்கழிவுகள், மாமிசங்கள், எலும்புத்துண்டுகள், பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள், எளிதில் மக்கிப்போகாத பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப்பொருள்களை அதே இடங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

இவற்றை உட்கொள்ள கால்நடை விலங்குகள் அப்பகுதியை முற்றுகையிடுகின்றன. இதில் நாய்கள், பறவைகள் , மட்டக்குதிரைகள் கழிவுகளை நாலாப்புறமும் இழுத்துச் சென்று போடுவதால் நடைபாதைகள் உட்பட நகரின் பல இடங்களும் மாசுப்பட்டு காணப்படுகின்றன.

குறிப்பாக கண்ட இடங்களில் கொட்டப்படும் குப்பை, பிளாஸ்டிக் கழிவுகளால் விலங்குகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இதில் அதிகமாக சவாரிக்கு பயன்படுத்தும் மட்டக்குதிரைகள் அதிகமாக உள்ளன. இவை அவ்வப் போது குப்பை அதிக கிடக்கும் இடத்தில் இறந்து கிடப்பதும் பிளாஸ்டிக் மற்றும் குப்பை கழிவுகளில் உள்ள மாசடைந்த பொருட்களை உண்பதும் காரணம் என தெரியவந்துள்ளது.







நுவரெலியாவில்தற்போது அதிக இடங்களில் வீதியோரத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வர்த்தக நிலையங்களில் சேகரித்து கொட்டப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் தீ வைத்து எரிக்கப்படுகிறது.




இதனால் அதிக சுற்றுலா பயணிகள் கூடும் இடங்களில் புகை மண்டலம் சூழ்ந்தது போல் காட்சி அளிக்கிறது. மேலும் காற்று மாசு ஏற்படுவதோடு, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது.

அத்துடன் பிரதான வீதியோரத்தில் நடப்பவர்களும் வாகனங்களில் வருவோரும் முகத்தை துணியால் மூடியும், மூக்கில் கை வைத்து செல்கின்றனர் இவற்றை நுவரெலியா மாநகரபையோ கண்டுகொள்வதில்லை எனவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

எனவே, சுற்றுலாப்பயணிகள் அதிகம் வருகைதரும் இடங்களில் தேவைக்கேற்ப குப்பைத் தொட்டிகளை வைப்பது அவசியம் எனவும் அப்பகுதிகளுக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனை கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாரில் பொலிஸாரின் சமிக்ஞை மீறிச்சென்ற டிப்பர் வாகனம் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு

## இருவர் கைது

மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் சட்ட விரோதமாகமணல்மண்ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை கடமையில் ஈடுபட்ட அடம்பன் பொலிஸார் இடை மறித்த போது பொலிஸாரின் சமிக்ஞை கட்டமைப்பைமீறிபோலீஸார் மீது வாகனத்தால் மோதிச் செல்ல முற்பட்ட போது குறித்த டிப்பர் வாகனத்தை நோக்கிபொலிஸார்துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைதொடர்ந்தபோது குறித்த டிப்பர் வாகனம் நிறுத்தப்பட்டது.

இதன் போது குறித்த டிப்பர் வாகனத்தில் சட்ட விரோதமான முறையில் ஏற்றிச் செல்லப்பட்ட மண் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டதோடு அவை மீட்கப்பட்டன என அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் அடம்பன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட நபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு, மீட்கப்பட்ட பொருள்களும் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அரச மற்றும் தனியார் காணிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்ற போதும் அடம்பன் பொலிஸார் மௌனம் காத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



# தமிழீழ நாட்டுப்பற்றாளர்கள் நாள் பிரான்ஸில் நடந்தது

பிரான்சின் பாரிசின் புறநகர்களில் ஒன்றான ம்ஷழிஜஊதீ நகரில் 2 ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாளும், தியாகச் சுடன் அன்னை பூபதி அவர்களின் நினைவேந்தல் நிகழ்வும் எழுச்சியுடன் நடைபெற்றது



குறித்த நிகழ்வில் பொதுச் சுடரினை ம்ஷழிஜஊதீ நகரின் முதலாவது துணை நகரபிதா புஜமிஜ¬லிஜதீ னிபுஹிறுாணுாஹிஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதுடன் அகவணக்கம், மலர் வணக்கம் ஆகியமை இடம்பெற்றது.



குறித்த நிகழ்வின் ம்ஷழிஜஊதீ நகரின் முதலாவது துணை நகரபிதா திரு.புஜமிஜ¬லிஜதீனிபுஹிறுாணுாஹி அவர்களும் ம்ஷழிஜஊதீ நகரின் ஏழாவது துணை நகரபிதா றீளஷ்ஜள-றீழிஷ்ஜமி-ம்ளஜஷ்வி மாவட்ட சபைஉறுப்பினருமானதிரு.கஷிழிதுஷ்-ஸீஜ¬ழிணுழிஜஷ் அவர்களும் பங்கேற்று சிறப்புரை வழங்கியிருந்தார்கள்.

தொடர்ந்து பிரான்சிஸ் வாழும் தமிழ் இளையோர்களின் எழுச்சி நடனம், கவிதை, பேச்சு , ஆகிய நிகழ்வுகளும் நடைபெற்றது.

இந் நிகழ்வை பிரான்ஸை தளமாக இயங்கள் தமிழ் பண்பாட்டு வலையம் -பிரான்சு , ஹ'ளவிமி ஹிலிற்வி யிளவி வீழிதுலிற்யிவி (சே நூ தமிழ்) ஆகிய அமைப்புகளால் ஒருங்கிணைக்கப்பட்டது

# 7 வயதுச் சிறுவன் காய்ச்சலால் சாவு

ஓட்டமாவடி - மீராவோடை ஹாஜியார் வீதியைச் சேர்ந்த ஏழு வயது சிறுவன் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காய்ச்சல் காரணமாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துள்ளார்.

இவர், இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரியும், மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய அதிபருமான ஏ.ஜே.மர்சூக் என்பவரின் புதல்வராவார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2025இல் வெளியிடப்பெற்றது